**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**
**வழக்கு எண்: CC -29/2023**
**வழக்கு சாட்சி :PW5(LW7)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆனந்தகுமார் | தொழில் | : | அரசு மருத்துவமனை திருநெல்வேலி, |
| தந்தை பெயர் | : | | வயது | | |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |

Solemnly affirmed by Thiru. Abraham Selvin , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**(எதிரிகள் ஆஜர் இல்லை .எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act-1969 Section -6(2) on** the **day 01th day of December 2025.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 – Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**
**Aathar Card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் காணொளி காட்சி மூலம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :-** சாட்சி தற்பொழுது திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் மேற்படிப்பு படித்து வருவதால் தற்பொழுது நீதிமன்றத்தில் ஆஜராவதற்கான சூழ்நிலை இல்லை என தெரியவருவதால் இவ்வழக்கில் சாட்சிகளை விசாரிக்க தாமதமாகுவதை தவிர்ப்பதற்காக பட்டியல் சாட்சி -7 ஆனந்தகுமார் சாட்சியத்தை நீதிமன்றத்தில் காணொளி காட்சி மூலம் குற்றவியல் நடைமுறை விதி 51ன் கீழ் இந்நீதிமன்றம் அனுமதிக்கிறது. பட்டியல் சாட்சி -7 ஐ அன்னவாசல் காவல் நிலைய போலிசாரும், நீதிமன்ற காவலருமான திரு.விக்னேஷ்வரன் , முதல் நிலை காவலர் எண்.2042 என்பவரின் முன்னிலையில் நீதிமன்றத்தின் முன்பாக அடையாளம் காட்டப்பட்டார். பட்டியல் சாட்சி – 7 அளிக்கும் சாட்சியங்களை அவர் நீதிமன்றத்தில் உள்ள சாட்சியங்களை பதிவு செய்யும் கணினித் திரையை உடனுக்குடன் பார்க்கும் வகையில் ஆனந்தமாறன் என்பருக்கு காணொலி காட்சி மூலம் காண்பிக்கப்பட்டு ஒவ்வொரு கேள்வியும் அதற்கான பதிலும் அவரிடமிருந்து உறுதி செய்யப்பட்ட பின்னரும், எதிரியின் வழக்கறிஞர் திரு. முனியப்பன் அவர்களின் முன்னிலையிலும், பின்வரும் சாட்சியங்கள் பதிவு செய்யப்படுகிறது. பட்டியல் சாட்சி -7 காணொளி சாட்சி அளிக்கும் போது அவருக்கு அருகாமையில் யாரும் இல்லை. சாட்சி யாருடைய தூண்டுதலிமின்றி சமிக்கைகள் இன்றி சுதந்திரமாக அவர் சாட்சியம்

அளிக்கிறார் என்று இந்நீதிமன்றம் உறுதி செய்யப்பட்ட பின்னர் பட்டியல் சாட்சி –7 யை காணொளி காட்சி மூலம் சாட்சியம் அளிக்க இந்நீதிமன்றம் அனுமதிக்கிறது. (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது)

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் மேற்படிப்பு படித்து வருகிறேன் . கடந்த 07.10.2021 ம் தேதி நான் புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்தேன். அன்றைய தினம் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது இரவு 11.00 மணியளவில் நிரோஜா, வயது 30 க/பெ. வீரசேகர், கோனக்குறிச்சிப்பட்டி , இலுப்பூர் என்பவர் அடையாளம் தெரிந்த மூன்று நபர்கள் தன்னை அவரது வீட்டின் அருகில் மாலை 06.30 மணியளவில் அடித்ததாக கூறி சிகிச்சைக்கு வந்தார். அவரை பரிசோதனை செய்ததில் வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை. அவரது இரண்டு முழங்கையிலும் இரத்தக்கட்டு இருந்தது. அவர் தலைவலி, தலைசுற்றல் இருப்பதாக கூறியதால் அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என கருத்துரை வழங்கியதன் அடிப்படையில் அவருக்கு ஏற்ப்பட்ட காயம் சதாராண காயம் என காயச்சான்றிதழ் வழங்கினேன். நான் வழங்கிய **விபத்து பதிவேடு அ.சா.ஆ.4 ஆகவும், காயச் சான்றிதழ் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எ.த.கு.வி</u>

1. காயம்பட்டதாக சொல்லப்படும் நிரோஜாவிற்கு நான் நேரடியாக சிகிச்சை அளிக்கவில்லை என்றால் அவசர சிகிச்சை பிரிவிற்கு வந்த நிரோஜாவிற்கு முதலுதவி செய்து நான் தான் உள்நோயாளியாக அனுமதித்தேன், பின்பு நான் சிகிச்சை அளிக்கவில்லை. அவசர சிகிச்சை பிரிவில் நான் முதலுதவி செய்யும் போது அவர் நல்ல உடல்நிலையில் இருந்தார் என்றால் சரிதான். அதற்கு பின்பு என்ன வகையாக சிகிச்சை அவருக்கு மேற்கொள்ளப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவர் அவசர சிகிச்சைக்கு வரும் போது 108 ஆம்புலன்சில் வந்ததாக என்ன குறிப்புகளும் விபத்து பதிவேட்டில் இல்லை என்றால் சரிதான்.

2. அவ்வாறு 108 ஆம்புலன்சில் வந்தால் அதை குறித்து விபத்து பதிவேட்டில் குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரிதான். காயம்பட்ட நபர் தன்னை மூன்று நபர்கள் தாக்கியதாக தான் குறிப்பிட்டார் என்றால் சரிதான். அவரை சிகிச்சைக்கு விநாயகர் என்ற நபர் சேர்த்தார் என்றால் சரிதான். அவசர சிகிச்சை பிரிவில் அவர் சிகிச்சைக்கு வரும் போது அவருக்கு இரத்த காயங்களோ அல்லது வெளிப்புற காயங்களோ இல்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு சிகிச்சை் அளித்த மருத்துவரின் மருத்துவ ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

மேற்படி சாட்சியங்கள் என் முன்னிலையில் என்னால் காணொலி மூலம் 9159714323 என்ற எண்ணில் இருந்து 9940933160 (LW7) என்ற எண்ணிற்கு இந்நீதிமன்றத்தின் Hybrid link மூலம் தொடர்புக் கொண்டு சாட்சி அளித்த சாட்சியங்களை அவருக்கு மீண்டும் விளக்கி படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.